செ.வெ.எண்: நாள்:02.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**தமிழ்நாடு அரசின் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு வழிகாட்டி நெறிமுறைகளை பொதுமக்கள் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கண்காணிப்பு குழுக்களுக்கான ஆலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

----

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு அரசின் கொரோனா நோய்த்தொற்று தடுப்பு வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்வது தொடர்பான கண்காணிப்பு குழுக்களுக்கான ஆலோசனை கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப அவர்கள் தலைமையில் இன்று (02.08.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

கொரோனா நோய்த்தொற்றின் 3-ஆம் அலை பல்வேறு நாடுகள், மாநிலங்களில் பரவி வருவதை ஊடகங்கள் வாயிலாக நாம் தினத்தோறும் அறிந்து வருகிறோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீவிர நடவடிக்கைகளின் காரணமாக கொரோனா நோய்த்தொற்று கட்டுக்குள் உள்ளது. நாமக்கல் மாவட்டமானது பல்வேறு மாநிலங்களுக்கு கட்டாயம் சென்று வரும் வகையிலான சரக்கு போக்குவரத்து, முட்டை விநியோகம், ஜவுளித்தொழில் உள்ளிட்ட பல்வேறு தொழில்கள் நடைபெறும் முக்கியமான மாவட்டமாக உள்ளது. இந்நிலையில் அரசு அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளாட்சி நிர்வாகங்களின் சுகாதார பணியாளர்கள், தன்னார்வாலர்கள் ஆகியோரது அர்பணிப்பு பணிகளால் நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று தற்போது கட்டுப்பாட்டில் உள்ளது.

கொரோனா வைரஸின் பல்வேறு வகைகள் விரைந்து பரவும் தன்மை உள்ளவை என்றும், அவை வீரியமாக பாதிப்பை உண்டாக்க கூடியவை என்றும் மருத்துவ வல்லுநர்கள் தொடர்ந்து எச்சரிக்கை செய்து வருகின்றனர். இதன் காரணமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நோய்த்தொற்று குறைவாக இருந்தபோதிலும் அதன் எண்ணிக்கை கூடாமல் தடுக்க பொதுமக்களுக்கு தொடர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

பொதுமக்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை கடைபிடிக்கவில்லை என்றால் நோய்த்தொற்று பரவும் வாய்ப்பு அதிகம் உள்ளது. எனவே பொதுமக்கள் தேவையின்றி வெளியில் நடமாடுவதை தவிர்க்க வேண்டும். கடைகளுக்கு செல்ல சரியான முறையில் திட்டமிட்டு சென்றால் மீண்டும், மீண்டும் வெளியில் செல்வதை தவிர்கலாம்.

நாமக்கல் மாவட்டத்தில் பொதுமக்கள் அரசின் வழிகாட்டி நெறிமுறைகளை பின்பற்றுவதை உறுதி செய்யவும், கண்காணிக்கவும் குறுவட்டத்திற்கு ஒரு குழுவீதம் 32 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களில் வருவாய்த்துறை, காவல்துறை, வளர்ச்சித்துறைகளை சேர்ந்த அலுவலர்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்கள் நாளை முதல் தினந்தோறும் குறைந்தது 1 மணி நேரத்திற்கு தங்கள் கண்காணிப்பிற்குட்பட்ட பகுதிகளில் வணிக வளாகங்கள், கடைவீதிகள், காய்கறி சந்தைகள், மளிகை கடைகள் உள்ளிட்ட பொதுஇடங்களில் தனிமனித இடைவெளி கடைபிடிக்கப்படுகின்றதா, பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து வருகின்றார்களா, கடையில் பணியாற்றும் பணியாளர்கள் முகக்கவசம் அணிந்துள்ளார்களா, பேருந்துநிலையம், பேருந்துகளில் அரசு விதிமுறைகள் கடைபிடிக்கப்படுகின்றதா என்று பார்வையிட்டு, மீறுவோர் மீது அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கடைகளில் கிருமி நாசினிகள், கைகழுவும் வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவா என்று ஆய்வு செய்ய வேண்டும். வீடுகளை விட்டு பொதுமக்கள் வெளியில் வரும்போது முகக்கவசம் இன்றி வெளியே வர அனுமதிக்ககூடாது. நாமக்கல் மாவட்டத்தை கொரோனா நோய்த்தொற்றிலிருந்து பாதுகாக்கும் பணியில் அரசு அலுவலர்களோடு பொதுமக்களும் தங்கள் பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சு.வடிவேல், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.வி.ரமேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.சி.சீனிவாசன், வருவாய்த்துறை அலுவலர்கள் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.